ந.க. உ1/7011 /2016
நாள்: 8 .10.2016

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர்.

## தடையின்மைச் சான்று

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், மீன்சுருட்டி கிராமம், வடக்குத்தெருவினைச் சேர்ந்த அன்பழகன் மனைவி திருமதி.தனலெட்சுமி என்பவர் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் ,வேம்புகுடி கிராம புல எண்: 143/4A3, 144/1B3, 152/1A1 ஆகிய புல எண்களில் மொத்த விஸ்தீரணம் 1.47.13 ஹெக்டேர் நன்செய் என வகைப்படுத்தப்பட்ட நிலங்களில் கோகிலாம்பாள் இண்டர்நேஷனல் (CBSE) பள்ளி அமைப்பதற்கு தடையின்மை சான்று கோரியது சம்மந்தமாக உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிந்துரையின்பேரிலும், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பெரம்பலூர் மண்டல நகர்புற ஊரமைப்பு, உதவி இயக்குநர் ஆகியோரின் கூட்டுபுல தணிக்கை அறிக்கையின்பேரிலும், மேற்படி நிலங்களில் புல எண்: 152/1A1-ல் 0.16.50 ஹெக்டேர் நிலம் போக, மற்ற நிலங்கள் கடந்த 3 பசலிகளாக பயிர்சாகுபடி ஏதும் செய்யப்படாமல் உள்ளதாலும், சமதளமாக உள்ளதாலும், நகர் ஊரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டு உள்ளதாலும், அரியலூர் பொதுப்பணித்துறை, மருதையாறு வடிநிலக்கோட்ட செயற்பொறியாளரால் நீர்வள ஆதாரத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை என தடையின்மை சான்று வழங்கி உள்ளதாலும், தனியருக்கு மேற்படி புல எண், 143/4A3- ல் 0.23.87 ஹெக்டேர் மற்றும் புல எண் 144/1B3- ல் 1.06.76 ஹெக்டேர், ஆக மொத்தம் 1.30.63 ஹெக்டேர் பரப்பு நன்செய் நிலத்தினை மட்டும் நன்செய் அல்லாத மாற்று உபயோகத்திற்கு பயன்படுத்திக்கொள்ள தடையின்மைச்சான்று வழங்கி உத்திரவிடப்படுகிறது.

ஒம்/-
மாவட்ட ஆட்சித்தலைவர்,
அரியலூர் 8/x/16

(முத்திரை: மாவட்ட ஆட்சித் தலைவர், அரியலூர்) 8.10.16

பெறுநர்:

திருமதி.அ.தனலெட்சுமி,
க/பெ அன்பழகன்,
வடக்குத்தெரு,
மீன்சுருட்டி கிராமம்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்.